DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM

**S.T.CNo.465/2021**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW1 | Caste | : | |
| Name | : | வெள்ளைச்சாமி | Age | : | 43 |
| F/N | : | முத்துராமலிங்கம் | Occupation | : | ரியல் எஸ்டேட் |
| Village | : | நாரையூரணி | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 14th day of July 2023.

**14.07.2023**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் நாரையூரணியில் குடியிருந்து வருகிறேன். நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். இதை தவிர வேறு வேலை நான் பார்க்கவில்லை. மேற்படி ரியல் எஸ்டேட் தொழில் செய்வதற்கு Brokers Act ன் படி பதிவு செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் GST பதிவு செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் தொழில் வரி செலுத்தி அதற்குண்டான ரசீதுகளை வைத்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி ரியல் எஸ்டேட் தொழில் மூலம் எனக்கு மாதம் எவ்வளவு தொகை கிடைக்கும் என்று குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் சரிதான். ஒரு இடத்தை விற்றால் சொர்ப தொகைகள் தான் கமிஷனாக கிடைக்கும் என்றால் சரிதான். நான் வருமான வரி செலுத்தும் நபர் என்றால் சரிதான். என்னிடம் 2019 ம் ஆண்டு முதல் 2023 ம் ஆண்டிற்குண்டான வருமான வரி ரசீதுகள் உள்ளது. வருமான வரி ரசீதுகளை என்னால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியும்.

2. இந்த வருமான வரி ரசீதுகளில் இந்த வழக்கில் கடனாக கொடுத்த தொகையை குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. இந்த வழக்கு தொகையை குறிப்பிடாததற்கு தனிப்பட்ட காரணம் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. நான் 7 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். என்னுடைய மனைவி இல்லரசி என்றால் சரிதான். எனக்கு மூன்று பிள்ளைகள் மூவரும் படித்து கொண்டிருக்கிறார்கள். என்னுடைய குடும்ப செலவுகளை நான் தான் கவனித்து வருகிறேன். எனக்கு வருமானம் நன்றாக வருகிறது. எனக்கு ரியல் எஸ்டேட் மூலம் கிடைக்கப்பெற்ற வருமானத்தின் விபரத்தை என்னால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியும். எதிரி எனக்கு நன்கு பழக்கமானவர். அவர் வாணியங்குளத்தை சேர்ந்தவர். அவரை 2010 ம் ஆண்டிலிருந்து எனக்கு தெரியும். ஆஜர் எதிரி கயித்து கம்பெனி வைத்துள்ளார்.

3. அவருடைய பொருளாதார சூழ்நிலைகள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவரின் மாத வருமானம் எவ்வளவு என்று எனக்கு தெரியாது. ஆனால் பத்து பேர்களை வைத்து நிறுவனம் நடத்தி வருகிறார். இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள புகார் மனு, எதிரிக்கு அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் பிற ஆவணங்களை நான் படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்திலும், புகார் மனுவிலும் கடந்த 30.01.2020 ம் தேதி காசோலை

கொடுக்கப்பட்டதா குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4. நான் என்ன தொழில் செய்கிறேன் என்றும், எவ்வாறு எனக்கு இந்த வழக்கின் தொகை கிடைக்கப்பெற்றது என்ற விபரத்தையும் எனது புகார் மனுவிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ரூ.5,00,000/– என்பது ஒரு பெரிய தொகை ஆகும். ரூ.5,00,000/– எந்த வகையில் எதிரிக்கு கொடுத்தேன் என்ற விபரத்தை புகார் மனுவிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான். என்னுடைய புகார் மனுவிலும், நிரூபண வாக்குமூலத்திலும் யாரிடம் இருந்து எதிரி ரூ.5,00,000/–த்தை பெற்றுக்கொண்டார் என்ற விபரம் இல்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரர் யாருக்கு காசோலையை கொடுத்தார் என்ற விபரம் தெளிவாக புகாரில் இல்லை என்றால் என்னிடம் தான் காசோலையை கொடுத்தார்.

5. என்னுடைய புகார் மனுவில் எந்த தேதியில் ஆஜர் எதிரி காசோலையை கொடுத்தார் என்ற விபரம் இல்லை என்றால் சரியல்ல. 30.12.2020ம் தேதி கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. எதிரியிடம் எந்த ஒரு ஆதாரமும் இல்லாமல் தான் மேற்படி ரூ.5,00,000/–த்தை கொடுத்தேன். எதிரியிடம் பணம் கொடுக்கும்போது என்னுடைய வீட்டில் எனது மனைவி இருந்தார். காலை சுமார் 10.00 மணிக்கு பணத்தை கொடுத்தேன். மேற்படி ரூ.5,00,000 எனக்கு ரியல் எஸ்டேட் தொழில் மூலம் கிடைத்த பணம் ஆகும். மேற்படி பணத்திற்குண்டான கணக்குகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். எதிரி மேற்படி பணத்தை எப்போது திருப்பி தருவதாக ஒப்புக் கொண்டார் என்ற விபரத்தை என்னுடைய புகார் மனுவிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

6. நான் வட்டி தொழில் செய்கிறேனா என்றால் தற்போது நிறுத்திவிட்டேன். நான் வட்டி தொழில் செய்கிறேன் என்றால் சரியல்ல. ரூ.20,000/–த்திற்கு மேலான தொகையை வங்கி பண பரிவத்தனை மூலம் தான் இன்னொரு நபருக்கு கொடுக்க வேண்டும் என்ற விபரம் எனக்கு தெரியும். நான் இவ்வழக்கு தொகையை வங்கி மூலம் எதிரிக்கு கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் பணம் கொடுத்த காலம் கொரேனா நோய் முடிந்த காலம் ஆகும். அவ்வாறான கால கட்டத்தில் இவ்வழக்கு தொகையை நான் எந்த ஒரு ஆதாரமும் இல்லாமல் கொடுத்திருக்க வாய்ப்பில்லை என்றால் ஏற்கனவே அவர் என்னிடம் பணம் வாங்கி திருப்பி செலுத்தியதால் இந்த வழக்கு பணத்தை கொடுத்தேன். மேற்படி பணத்தை செலுத்தியதற்குண்டான ஆவணங்கள் என்னிடம் தற்போது இல்லை.

**(குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது).**

**(ஒப்பம்/–க.பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண்.2**
**இராமநாதபுரம்.**